


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 -1916 ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் – 1, இதழ் – 2, ஏப்ரல் – ஜுன் 2015




**R5611**

## The Soul, not the Body, Brought from the Tomb
## கல்லறையி–ருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல

"நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு." (அப். 24:15)

நூற்றாண்டு காலமாக மக்கள் வேதத்தின் போதனைகளைக் குறித்து குழப்பத்தி–ருப்பதை நாம் கவனிக்கும்போது, மரணத்தில் நித்திரையி–ருப்பது சரீரமல்ல என்பதற்கும், இந்த காலக்கட்டத்தில் ஆத்துமா மேன்மையான ஒரு இடத்திற்கு செல்லவில்லை என்பதற்கும் என்ன ஆதாரம் நமக்கு இருக்கிறது என்ற கேள்வி, எழுவது இயற்கையானதொன்றாகும். இந்த விஷயத்தில் தேவனுடைய வசனத்தில் எந்தவித யோசனையும் காணப்படவில்லை என்பதே பதிலாக இருக்கிறது. சரீர உயிர்த்தெழுதலைக் குறித்து வேதம் ஏதும் கூறாதபடிக்கு, ஆத்துமாவைக் குறித்தே அதிகம் கூறுகிறது. மரணத்தை நித்திரை என்று வேத வசனம் அதிகம் கூறுகிறது. நல்ல நிலையில் இருக்கும்போது ஒவ்வொரு இரவிலும் சரீரம் உறங்குகிறது. சகலமும் மரிக்கிற ஆதாமின் மரண நிலைமையை விளக்குவதற்கு வேதம் இந்த சரீரத்தின் இயற்கையான நித்திரையை பயன்படுத்துகிறது.

நமது மனதில் இந்த விஷயம் குறித்து தெளிவு பெறுவதற்கு, பின்னோக்கி ஆதிக்குச் சென்று ஆத்துமா என்றால் என்ன என்பதைக் காணவேண்டும். வேதத்தில் ஆதியாகமத்தில் முதன்முத–ல் படிக்கிறோம். (ஆதி. 1:27) அதாவது தேவன் மனிதனை படைத்தார் –மனித சரீரத்தை அல்ல–என்று படிக்கிறோம். பிறகு மனிதன் என்பது என்ன என்ற கேள்வி எழுகிறது.

மனிதன் வெறும் திடப்பொருள் அல்ல, ஒரு அறிவுள்ள ஜீவி, தனிப்பட்ட ஒருவர். பூமியின் மண்ணி–ருந்து தேவன் மனிதனையல்ல, ஒரு உருவத்தை, ஒரு சரீரத்தை உருவாக்கினார்; அது மனிதனாக ஆக்கப்பட்டது; அதன் நாசியிலே தேவன் "ஜீவ சுவாசத்தை" ஊதினார். இந்த சுவாசம் எல்லா ஜீவன்களுக்கும் பொதுவானது என்று எபிரேய பதம் குறிப்பிடுகிறது. இது கீழான மிருகங்கள் பெற்றிருப்பதைக் காட்டிலும் விசேஷமானது அல்ல. மாறாக, மீனுக்கும், பறவைக்கும், மிருகங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அதே ஜீவன் தான் – ஜீவிக்கிற உரிமைதான்.

மிருகங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதே ஜீவன்தான் மனித இனத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஜீவன் தான் எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாக இருந்து உடலுக்குள் சென்று உயிரைக் கொடுக்கிறது. தாழ்வான மிருகங்களுக்கும், மனிதனுக்கும் வித்தியாசம் என்னவென்றால் அவர்கள் ஒரேவிதமாக ஜீவன் பெற்றிருந்தாலும், மனிதன் மேலான மூளையைப் பெற்றிருக்கிறான். மனிதன் மேன்மையான மூளையைப் பெற்றிருப்பதால், தாழ்வான மிருகங்கள் சிந்திக்க முடியாத விஷயங்களை மனிதன் சிந்திக்க முடியும். அவனது தலை அமைப்பு வித்தியாசமானது. பூரணத்தில் சற்று குறைவுபட்டவர்களாக இருக்கும் மனிதர்கள் சிந்திப்பதை போன்று, அபூர்ணத்தில் அதிகமாக உள்ள மனிதர்களால் சிந்திக்க இயலாது. சிருஷ்டிப்பில் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட அசலான பூரணத் தன்மையையும், அசலான அறிவையையும் சிலர் கொஞ்சமாக இழந்திருப்பார்கள், மற்றவர்கள் அதிகமாக இழந்திருப்பார்கள்.

### மெழுகுவர்த்தியைக் கொண்டு ஒரு விளக்கம்

மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமத்தின் விளக்கத்தை ஆராயும்போது, தேவன் பூமியின் மண்ணினாலே சரீரத்தை உருவாக்கி அதிலே ஜீவசுவாசத்தை ஊதியபோது, இந்த இணைப்பு ஒரு ஆத்துமாவை, உணர்ச்சியுள்ள ஒரு ஜீவியை உருவாக்கியது என்று வெளிப்படுத்துகிறது. சரீரம் என்பது ஒரு நபரல்ல, ஜீவ சுவாசத்திற்கு சக்தியில்லை, ஆனால் இரண்டும் இணையும்போது ஓர் அறிவுள்ள ஜீவியை உருவாக்குகிறது.

இந்த கருத்தின் நேர்த்தியான விளக்கத்தை ஒரு மெழுகுவர்த்தி கொடுக்கக்கூடும். மெழுகும்

அல்லது மிருக கொழுப்பும் திரியும் சேர்ந்ததுதான் மெழுகுவர்த்தி. தீப ஒளி ஒரு வெளிப்புற சக்தியால் கொடுக்கப்படுகிறது. அதாவது ஒரு தீப்பொறிதான் அதைச் செய்கிறது. திரிக்கு தீப்பொறி கொடுக்கப்படும்போது காற்று, மெழுகு அல்லது மிருக கொழுப்புடன் இணைந்து தீப ஒளியைக் கொடுக்கிறது.

மெழுகுவர்த்தி சரீரத்தை குறிப்பதாக வைத்துக் கொள்வோம், காற்று ஜீவ சுவாசத்தைக் குறிக்கிறது, தீச்சுடர் உணர்ச்சியுள்ள ஒரு ஜீவியைக் குறிக்கிறது. தேவன்தான் தீப்பெட்டியை பற்றவைத்து, எரிகிற மெழுகுவர்த்தியாகிய மனிதனை உருவாக்க முடியும். இந்த ஜீவன்தான், சில கட்டுபாடுகளுடன் தேவன் ஆதியிலே ஆதாமுக்குக் கொடுத்தது. இந்த ஜீவன், மனிதன் தேவனுக்கு கீழ்ப்படிகிறவரை தொடரும், ஆனால் கீழ்ப்படியாமல் போனால் அந்த ஜீவனை தேவன் திரும்ப எடுத்துக் கொள்வார்.

ஆதாம் கீழ்ப்படியாமற் போனான். அவனது ஆத்துமா மரண தண்டனைக்குட்பட்டது. (எசே. 18:4, 20) ஆத்துமா பரிசுத்தமாக இருக்கும்போது, சரீரம் மட்டும் பாவம் செய்து தண்டனைக்குட்படவில்லை. மாறாக "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்." ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட மரண தண்டனை அவனது ஆத்துமாவை பாதித்தது. ஜீவன் என்னும் பொறிதான் ஆத்துமாவை உண்டாக்கியது, அந்த ஜீவன் என்னும் பொறி எடுக்கப்பட்டபோது ஆத்துமா அணைந்து போனது. மெழுகுவர்த்தியை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு, தீபத்தை யாராவது ஊதி அணைத்தால் மெழுகுவர்த்தி அணைந்து பழைய நிலைக்கு வந்துவிடும்.

ஆனால் ஆதாம் மரிப்பதற்கு முன்னால், ஜீவன் என்னும் தீபம் முழுவதுமாக அணைக்கப்படுவதற்கு முன்னால், ஜீவன் என்னும் தீப்பொறியை தமது பின்ளைகளுக்குக் கொடுத்துவிட்டான். அவர்களும் அதை தன் சந்ததியாருக்கு கொடுத்தார்கள். எனவே ஜீவன் என்னும் தீப்பொறி தலைமுறை தலைமுறையாக கொடுக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. முதல் மெழுகுவர்த்தியை அணைத்தால் கூட எரிகிற மற்ற மெழுகுவர்த்திகளை அது பாதிக்காது. ஆனால் அனுப்பப்பட்ட இந்த ஜீவன் மற்றவர்களை பலவீனப்படுத்தியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் ஆதாம் மோசமான நிலைமையின் கீழ் வாழ்ந்தது தொள்ளாயிரத்து முப்பது வருடம், ஆனால் இப்போது மனிதனின் சராசரி வயது முப்பத்து மூன்றாக உள்ளது. (இது 1915—ன் புள்ளி விபரப்படி)

**மரித்தவர்கள் உறங்குகிறார்கள்**
**(எந்த அர்த்தத்தில்)**

ஆத்துமாதான் மரிக்கிறது என்று வேத வாக்கியம் எல்லா இடங்களிலும் கூறுகிறது. ஆத்துமா மரித்தால், மனுக்குலத்தின் எதிர்கால வாழ்க்கை என்ன என்ற கேள்வி எழுகிறது. ஆதியி—ருந்தே நடக்கப்போகிற அனைத்தையும் முன்னறிந்த தேவன், தம்முடைய திட்டத்தில் மரித்த மனித ஆத்துமாக்கள் உயிர்பெறும்படியான ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்று வேதம் பதில் கூறுகிறது. அவருடைய அறிவுக்கும், வல்லமைக்கும் அப்பாற்பட்டது ஒன்றுமில்லை. சரீரம் திரும்ப உயிர்பெறும் என்று எங்கேயும் அவர் சொல்லாமல் ஆத்துமாதான் உயிர்பெறும் என்று கூறுகிறார்.

கிறிஸ்துவின் காலத்தில் இருந்த சதுசேயர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுத—ல் விசுவாசம் இல்லாதிருந்தார்கள். பிரேதக் குழியிலுள்ள அனைவரும் தன்னுடைய சத்தத்தைக் கேட்டு புறப்படுவார்கள் என்று இயேசு கூறியதைக் கேட்ட சதுசேயர்கள், அவரது கூற்று அறிவீனமானது என்று வாதித்தார்கள். கிறிஸ்துவினுடைய போதகத்தில் குற்றம் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் அவர்கள் அவரிடம் வந்து, ஒரு ஸ்திரீ ஏழு கணவன்மார்களை உடையவளாயிருந்து, அவளுக்கு முன்பே அவர்கள் எல்லாரும் மரித்துப் போனார்கள், உயிர்த்தெழுத—ல் அவள் யாருக்கு மனைவியாய் இருப்பாள் என்று கேட்டார்கள் (லூக். 20:27—40)

அவர்கள் வேத வசனத்தை புரிந்து கொள்ளவும் இல்லை, சர்வ வல்லவரின் வல்லமையை சரியாக உணர்ந்து கொள்ளவும் இல்லை என்று இயேசு பதிலுரைத்தார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்று அவர் அறிவுறுத்திக் கூறினார். மேலும் "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் " என்று மோசேயிடம் தேவன் எரிகிற முட்செடியி—ருந்து கூறி இதை குறிப்பாக உணர்த்தினார் என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். தேவன் மோசேயிடம் சொன்ன விஷயமே உயிர்த்தெழுதலுக்கு ஒரு ஆதாரம். ஏனெனில் இனி என்றென்றும் உயிரோடு இருக்க முடியாதவர்களைத் தேவன் நிச்சயமாக குறிப்பிட்டிருக்கமாட்டார். உயிர்த்தெழுதலைப் பற்றிய தேவனுடைய தீர்மானம் நிலையானது, மாற்ற முடியாதது. மரித்தோர் என்று அழைக்கப்பட்ட "எல்லோரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே." தேவனுடைய கருத்தின்படி அவர்கள் நித்திரையி—ருக்கிறார்கள், அழிக்கப்படவில்லை. எனவே தேவனுடைய வசனம் மரித்தோர்களை நித்திரையி—ருக்கிறார்கள் என்று கூறுகிறது.

வெவ்வேறானவர்கள் தங்கள் பிதாக்களோடே

சேர்க்கப்பட்டார்கள் என்றோ அல்லது தங்கள் பிதாக்களோடே நித்திரையடைந்தார்கள் என்றோதான் பழைய ஏற்பாடு முழுவதும் நாம் வாசிக்கிறோம். சரீரம் நித்திரையி–ருந்ததா? இல்லை, அது முற்றிலுமாக அழிந்துவிட்டது – அது எதனால் சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த மண்ணுக்கே திரும்பிவிட்டது. பிறகு வேறு எது நித்திரையி–ருந்தது? தேவன் ஒரு நபர் – ஆத்துமா என்று அங்கீகரித்த அந்த ஒன்றுதான் நித்திரையி–ருந்தது. நல்லார், பொல்லார் யாவரின் ஆத்துமாக்களும் நித்திரையடைந்தது. ஏனென்றால், "நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு" என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆபிரகாமின் பிதாக்கள் பரிசுத்த மனிதர்கள் அல்ல, ஆனால் புறஜாதியினர். அவன் தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கும் பொருட்டு தனது இனத்தாரிடத்தி–ருந்து அழைக்கப்பட்டான். ஆபிரகாம் மரித்த தன் பிதாக்களோடே சேர்க்கப்பட்ட போது, அவர்கள் இருந்த இடத்துக்கே இவனும் சென்றான். அந்த இடம் "ஷியோல்" என்று பழை ஏற்பாட்டிலும், "ஹேடஸ்" என்று புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது; அது கல்லறை அல்லது மரித்த நிலை. நல்லவர்களும் கெட்டவர்களுமாகிய இஸ்ரயே–ன் எல்லா ராஜாக்களும் மற்றும் தீர்க்கதரிசிகளும் அவர்கள் பிதாக்கள் அண்டையில் சேர்க்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். அவர்கள் மரணத்தில் நித்திரையி–ருக்கிறார்கள்.

## சாதாரணமாக கவனித்திராத சில முக்கியமான விஷயங்கள்

ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகள் இறந்திருந்த அந்த அறைக்குள் இயேசு நுழைந்த போது, "அழாதேயுங்கள், அவள் மரித்துப் போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" என்றார். அவர் அவள் மோட்சத்தில் இருக்கிறாள் என்றோ, உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிறாள் என்றோ அல்லது நரகத்தில் இருக்கிறாள் என்றோ கூறவில்லை. அவர் லாசருவைப் பற்றி கூறும்போது கூட, "லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்றார். அதற்கு அவரது சீஷர்கள், "அவன் நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான்" என்றார்கள். ஆண்டவரின் வார்த்தைகளை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை. கடைசியாக இயேசு, "லாசரு மரித்துப் போனான்" என்று வெளிப்படையாகச் சொல்–, "இப்பொழுது அவனிடத்திற்கு போவோம் வாருங்கள்" என்றார். ஆகையால் அவர்கள் லாசருவின் கல்லறையினிடத்திற்குச் சென்றார்கள்.

இயேசு, மார்த்தாள், மரியாளை சந்தித்தபோது, லாசரு தன் கையில் இசைக்கருவி முதலானவைகளை வைத்துக்கொண்டு மோட்சத்தில் (பரலோகத்தில்) இருக்கிறான் என்பது போன்ற வார்த்தைகளைக் கூறவில்லை. "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று அவர் கூறினார். அதற்கு மார்த்தாள், "உயிர்த்தெழுதல் நடக்கும், கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று பதில் கூறினாள். கடைசி நாள் என்பது மரித்த அனைவரும் எழுந்துவரும் மகா நாளாகிய ஏழாவது ஆயிரம் ஆண்டின் நாள், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நாளாகும். அவளை உற்சாகப்படுத்தும்படியாக இயேசு, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார். என்னாலேயல்லாமல் உயிர்த்தெழுதல் நடைபெறாது, என்னை ஏன் இப்போது கேட்கவில்லை என்று கூறினார். ஆனால் மார்த்தாள் அவர் கூறிய கருத்தை புரிந்துகொள்ளவில்லை. அவர் "அவனை எங்கே வைத்தீர்கள்" என்று கேட்டார்.

மார்த்தாளும், மரியாளும் அவரை லாசருவை வைத்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். கல்லறையின் மே–க்கிற கல்லை எடுத்துப்போடும்படி இயேசு சொன்னபோது, மார்த்தாள், தன் சகோதரன் மரித்து நான்கு நாளாயிற்றே, நாறுமே என்று கூறினாள். இயேசு, "லாசருவே, வெளியே வா" என்று கூறினார் என்று வாசிக்கிறோம். இயேசு, லாசருவே, பரலோகத்திருந்து (மோட்சத்தி–ருந்து) இறங்கி வா என்றோ அல்லது கீழேயி–ருந்து ஏறி வா என்றோ கூறவில்லை. (யோவா. 11:1–46)

லாசரு ஒரு மரித்துப்போன மனுஷன், இயேசு வருவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பே மரித்துப்போனவன். நமது ஆண்டவர் அறிவித்ததுபோல, தெய்வீக கருத்தின்படி அவன் நித்திரையி–ருந்தான். அதாவது அவனது ஆத்துமா அழியவில்லை. வேத வாக்கியங்களின்படி ஆத்துமாவை அழிக்கமுடியும். ஒரு சமயத்தில் நமது ஆண்டவர் தமது சீஷர்களிடம் கூறியதாவது, "ஆத்துமாவை கொல்ல வல்லவராயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் கெகன்னாவில் (இரண்டாம் மரணத்தில்) அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்." (மத். 10:28)

## கிறிஸ்துவின் மரணம் எதை நிறைவேற்றியது

நித்திய ஜீவனைக் குறித்த அறிவை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பானது தேவனுடைய தீர்ப்பினால் ஒவ்வொரு மனித ஆத்துமாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பவுல் கூறுகிறதாவது : "கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும், எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்." (ரோம. 14:9) மரணமென்னும் சிறைச்சாலைக்குச் சென்ற அனைவரையும் கட்டுப்படுத்தும் உரிமையை பெறத்தக்கதாக நமது ஆண்டவர் மனிதனாக வாழ்ந்து, மரித்தார். ஆகவே நிச்சயமாக மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு

என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன.

பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவரது சத்தத்தைக் கேட்டு, புறப்பட்டு வருவார்கள் என்று நமது ஆண்டவர் கூறுகிறார். (யோவா. 5:28,29) இது எப்படி நடக்கும் என்று அப். பவுல் 1 கொரி. 15ம் அதிகாரத்தில் விளக்குகிறார். நமது ஆண்டவரின் மரணம் எல்லாருக்குமானது என்று குறிப்பிடுகிறார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்." சபை வகுப்பார் முதன் முத—ல் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார். மேலும், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் நமது போதகமும் விசுவாசமும் வீணாயிருக்கும் என்று கூறுகிறார். கிறிஸ்து மரித்தோரி—ருந்து எழுந்ததால், உயிர்த்தெழுதல் உண்டு என்ற ஓர் உறுதிமொழி கிடைத்தது என்று அப். பவுல் முடிக்கிறார்.

### சரீரத்தின் உயிர்த்தெழுதல்

மரித்த கோடிக்கணக்கானோரின் சரீரத்தை புதுப்பித்தல் என்பது ஒரு அபத்தமான காரியம். மனித வடிவம் ஒவ்வொரு ஏழு வருடத்திற்கு ஒரு முறை மாறுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது ஒரு மனிதன் தன் நாற்பத்து ஒன்பது வருட ஜீவிய காலத்தில் பழைய செல்கள் புதுப்பிக்கப்பட்டு ஏழு சரீரங்களை பெறுகிறான். எனினும் இந்த சரீர மாறுதல் மனிதனின் தோற்றத்தை பாதிப்பதில்லை. ஒரு காலையோ, ஒரு கையையோ அல்லது ஒரு கண்ணையோ இழந்தாலும் கூட மனித ஆத்துமா தொடர்ந்து இருக்கிறது. ஏனெனில் இந்த அறிவுள்ள மனித ஜீவி, சரீரம் மற்றும் ஜீவன் இணைந்து வந்ததாகும். இந்த ஆத்துமாவை, நபரை புதுப்பிப்பதே தேவனுடைய தீர்மானமாகும். சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி அவர் கூறுவதே இல்லை.

சரீர உயிர்த்தெழுதலைப்பற்றிய கோட்பாடு வேத சாஸ்திரிகளுக்கு பெரும் சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு செய்தித்தாளில் வெளிவந்த ஒரு கதை பிரபலமாக இருந்தது. ஒரு ஆப்பிள் மரத்தின் கீழ் ஒரு மனிதனின் சவப்பெட்டி புதைக்கப்பட்டிருந்தது. மரத்தின் கீழே தோண்டி பார்த்தபோது அதன் வேர்கள் சவப்பெட்டியை துளைத்துச் சென்று சரீரத்தை உட்கிரகித்துக் கொண்டிருந்தது. அதன் வேர்கள் ஒரு கையைப் போலவும், காலைப் போலவும், மனித அங்கத்தைப் போலவும் இருந்தது. அதாவது அந்த மரம் மனித சரீரத்தின் மேல் ஜீவித்தது. அந்த மரத்தின் ஆப்பிள் எல்லா இடங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்பட்டது. சில பழங்கள் பன்றி போன்ற விலங்குகளுக்கு கொடுக்கப்பட்டன. சரீர உயிர்த்தெழுதலைப் பற்றிய கொள்கையை உடையவர்கள் தங்களது கொள்கைகளை இந்த உண்மைகளுடன் இணைந்து தீர்ப்பது மிகவும் கடினமான பிரச்னையாக இருக்கிறது.

மரித்த அதே சரீரமே உயிர்த்தெழுத—ல் எழுந்துவரும் என்று வேதாகமத்தில் எந்த ஒரு வசனமும் கூறுவதில்லை. மாறாக "நீ விதைக்கிற போது, இனி உண்டாகும் மேனியை விதையாமல்,கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்" என்று வேதம் கூறுகிறது. தேவனுக்கு சரீரத்தை உண்டாக்குவதில் எந்தவித கஷ்டமுமில்லை, சதுசேயர்கள் தேவனுடைய வல்லமையில் சந்தேகம் உடையவராயிருந்தனர்.

### ஒரு பிரமிக்கத்தக்க அற்புதம்

ஒரு சரீரத்தை அதே மூளைத் திறமையுடன், அதே உணர்ச்சியுள்ள ஜீவியை உருவாக்குவதை நமது கற்பனைக்கெட்டாத ஒரு அற்புதமாக நாம் ஏற்றுக்கொள்கிறோம். எனினும் இதில் முக்கியமான இன்னொரு விஷயம், முழு மனுக்குலத்தையும்—கோடான கோடி ஜனங்களையும் திரும்பி உயிர்த்தெழுப்ப தேவன் தீர்மானித்திருக்கிறார் என்பதே.

தேவையற்ற காரியங்களை, அவைகள் எங்கேயிருந்து வந்தாலும், ஒதுக்கித் தள்ளிவிட்டு நாம் தேவனுடைய வார்த்தைகளை பின்பற்ற வேண்டும். "நம்மை ஞானவான்களாக்குகிற வசனத்தை நாம் சாந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்." வேதாகம அதிகாரத்தில் வராத எந்த காரியத்தையும் நாம் ஒதுக்கித் தள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் வேத வசனத்தில் காண்கிறதைக் காட்டிலும் வேறெதையும் மனிதனால் கொடுக்க இயலாது. மேன்மை, அழகு, நீதி, அன்பு ஆகியவைகளின் சாரமாக வேதாகமம் இருக்கிறது.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில், இயேசு "தம்முடைய ஆத்துமாவை ஊற்றினார் என்றும்," அவருடைய ஆத்துமாவை "குற்ற நிவாரண ப—யாக ஒப்புக் கொடுத்தார்" என்றும் நாம் வாசிக்கிறோம். (ஏசா. 53: 12,10) மேலும் நாம், "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் (ஷியோல்) விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (சங். 16:10) என்றும் வாசிக்கிறோம். இந்த தீர்க்கதரிசனத்தை அப். பேதுரு இயேசுவின் ஆத்துமாவை தேவன் பாதாளத்திலே (ஹேடஸ்) விடமாட்டார் என்று விளக்கிக் கூறுகிறார். (அப். 2:22—32) இயேசுவின் ஆத்துமா கல்லறையிலே விடப்படுவதில்லை.

தமது சொந்த உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு கூறியதாவது: "மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." (வெளி.

1:18) தேவன் அவரை மரண நிலையி—ருந்து மூன்றாம் நாள் எழுப்பினார். அவர் உயிர்த்தெழுந்த அதிகாலையிலே, மரியாளிடம், "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை.... நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் " என்று கூறினார். (யோவா. 20:17) பாதாளத்துக்கு (கல்லறை) இறங்கி முதலாவது உயிர்த்தெழுந்தவர் இவர்தான்: மேலும் அவர் தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டார். (எபே. 1:20—23; பி—. 2:9—11)

நமது ஆண்டவர் இப்படிப்பட்ட அனுபவங்களை கடந்து வந்ததால், அப்போஸ்தலர் கூறுவது என்னவென்றால், நமது கர்த்தராகிய இயேசுவை கல்லறையி—ருந்துகொண்டு வந்தவரே நம்மையும் கொண்டு வருவார் என்பதாகும். நம்பிக்கையில்லாதவர்களைக் குறித்து நாம் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று அவர் நமக்கு கூறுகிறார். ஏனெனில், இயேசு மரித்தார், மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவாசிப்பதால், மரித்த நிலையி—ருக்கிற சகலரையும் அவர் மறுபடியும் ஜீவனுக்குள் கொண்டுவருவார் என்று விசுவாசிப்போமாக. (1 தெச. 4:13,14) "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு புறப்படுவார்கள் " என்று நாம் விசுவாசிப்போமாக (யோவா. 5:28,29) — முதலாவது சபையார். "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை ; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோட கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் " என்று வேதம் கூறுகிறது. (வெளி 20:6)

இரண்டாம் மரணத்தின் அதிகாரத்திற்கு கீழ் வருகிற மற்றவர்களும் உயிர்த்தெழுத—ல் எழுந்து வருவார்கள். அவர்கள் முற்றிலுமாக எப்பொழுதும் மரணத்தி—ருந்து விடுவிக்கப்பட்டவர்களாக இருப்பார்களா, மாட்டார்களா என்பது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்ப காலத்தில் அவர்களது நடத்தையின் மூலம் தீர்மானிக்கப்படும். அந்த காலத்தில் தேவனுடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை அவர்கள் அறிவிக்கப் பெறுவார்கள். அவர்கள் தேவனுடன் முழுமையாக இசைவுக்கு திரும்பிவருகிற சந்தர்ப்பத்தைப் பெறும்போது, நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.